★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: கார்த்திகை 6உ புதன் (21—11—56) ★ ★ வெளியீடு: கார்த்திகை 7உ வியாழன் (22—11—56) [இதழ் 140

உலக மக்கள் தொகை:

எதிர்கால நிலைமைபற்றி விஞ்ஞானி தரும் தகவல்

சென்னை, நவ. 19—

தற்போது உலகத்தில் 250 கோடி மக்கள் வாழ்கின்றனர் என்றும், 2,001-வது ஆண்டில் உலகத்தில் வாழும் மக்களின் தொகை 400 கோடியாகிவிடும் என்றும், அதை யாரும் தடுக்கமுடியாது என்றும், பிரிட்டிஷ் விஞ்ஞானி சார்ல்ஸ் டார்வின் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த இரண்டு நூற்றாண்டுகளாக மக்கள் தொகை அதிக

(4-ம் பக்கம் பார்க்க)

அரிசி கள்ளக்கடத்தல்:

பம்பாய் வர்த்தகர் துரோகத்தனம்!

டெல்லியின் கையாலாகாத்தனம்

விலை ஏற்றத்தைத் தடுப்பதில் தோல்வி?

வெற்றிபெற்றுவிட்டதாக டெல்லி மந்திரி புளுகு

புதுடில்லி, நவ. 20—

சில பம்பாய் வியாபாரிகள், அரிசியைத் திருட்டுத்தனமாக பாகிஸ்தானுக்கும் கோவாவிற்கும் கடத்திவருகின்றனராம்!

தடுப்பு நடவடிக்கைகளையும் மீறி, கள்ளக்கடத்தலில் இந்த வியாபாரிகள் தீவிரமாக ஈடுபட்டிருக்கின்றனராம்!

ஆனால் இவர்களைத் தண்டிப்பதற்குப் போதுமான சாட்சியங்கள் இல்லாது போய்விடுகிறதாம்!

பம்பாய் வியாபாரிகளின் இந்தத் துரோகத்தனம் பற்றிய தகவலை மத்திய உணவு மந்திரி மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

★

'கட்டுப்படுத்த முடியவில்லை'

'நிலைமை கைநழுவி விட்டது'

"அரிசி விலை ஏற்றத்தைத் தடுக்க சர்க்கார் மேற்கொண்ட நடவடிக்கைகள் விலையைக் கட்டுப்படுத்தப் பயன்படவில்லை; நிலைமை கைநழுவிவிட்டது"

என்று, சென்னை சர்க்கார் வட்டாரங்கள் தோல்வியை தாராளமாக ஒப்புக்கொள்கின்றன என்று செய்தி கிடைத்துள்ளது.

★

விலை ஏற்றம் தடுக்கப்பட்டு விட்டதாம்!

"இரண்டு மாதங்களுக்கு முன்பிருந்த உணவுப் பொருள்களின் ஏறுமுகமாயிருந்த விலை இப்போது தடுத்து நிறுத்தப்பட்டுவிட்டது; அரிசியும் கோதுமையும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது; 18,000-த்திற்கும் அதிகமான நியாய விலைக் கடைகளைத் திறந்தது போன்ற சர்க்கார் மேற்கொண்ட நடவடிக்கைகளின் மூலம் இந்த விலை ஏற்றம் தடுக்கப்பட்டுள்ளது"

என்று, மத்திய உணவு மந்திரி மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறாராம்.

★

7,000 டன் அரிசி வருகிறதாம்

நியாய விலைக் கடைகள் மூலம் விற்பதற்கென்று சுமார் 7,000 டன் அரிசிகப்பல்மூலம் வரும் என்று சென்னை சர்க்கார் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனராம்!

குறைந்தபட்ச சம்பள விகிதச் சட்டம்

அமைச்சர் தரும் தகவல்

புதுடில்லி, நவ. 10—

எல்லா மாநிலங்களிலும், குறைந்த பட்ச சம்பள விகிதச் சட்டத்தின்கீழ் வரக்கூடிய பெரும்பாலான தொழில் துறைச் சிப்பந்திகள் கொண்டு வரப்பட்டிருக்கின்றனர் என்றும், அந்தந்த இடத்திற்கேற்ற வாழ்க்கைச் செலவு போன்ற அம்சங்களைக் கருத்தில் கொண்டே மாநில சர்க்கார்கள் குறைந்த பட்ச சம்பள விகிதங்களை நிர்ணயித்திருக்கின்றனர் என்றும், மக்கள் சபையில் தொழிலாளர் நலத் துணை அமைச்சர் அறிவித்துள்ளார்.

12 மாநிலங்களில்

25,000 பேருக்கு வேலையளிக்கும் சர்க்கரைத் தொழில் திட்டம்

450 ஊழியர்களுக்குப் பயிற்சியளிக்கப்படும்

புதுடில்லி, நவ. 20—

வெல்லம், கண்ட்சாரி சர்க்கரைத் தொழிலின் அபிவிருத்திக்காக, நடப்பு நிதி ஆண்டில் பல மாநிலங்களில் வேலைத் திட்டமொன்றை மேற்கொள்ள இந்திய சர்க்கார் அனுமதியளித்துள்ளனர்.

இந்தத் திட்டத்தினகீழ், கான்பூரிலுள்ள மத்தியப் பயிற்சி நிலையத்தில், பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த 450 ஊழியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும்.

இத்திட்டம் நிறைவேற்றப்பட்டால், குறைந்த பட்சம் 25,000 பேருக்கு முழுநேர வேலையும், உற்பத்திகால வேலையும் அளிக்க முடியுமாம்.

இத்திட்டத்தை 12 மாநிலங்களில் நிறைவேற்றி வைக்கும் பொருட்டு, மத்திய உற்பத்தி அமைச்சரவை மொத்தம் சுமார் ரூ 25 இலட்சம் மானிய உதவியாகவும் கடனுதவியாகவும் வழங்கியுள்ளது.

இந்தியைக் கட்டாயமாக்கும் மூன்று மொழிக் கல்வி ஏற்பாடு

சென்னை சர்க்கார் செய்யப் போவதென்ன?

புதுடில்லி, நவ. 19—

தாய்மொழியுடன் இந்தி, ஆங்கிலம் இரண்டையும் உயர்நிலைப் பள்ளிகளில் கட்டாய பாடமாக்கும் திட்டம் ஒன்றை கல்விக்கான மத்திய ஆலோசனைக் குழுவின் பரிசீலனைக்கு விடுவதென்று டில்லி சர்க்கார் முடிவு செய்திருப்பதாகத் தெரிய வருகிறது.

இந்தத் தகவலை, மத்திய கல்வி மந்திரி ஆசாத் மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

இந்தத் திட்ட விபரங்கள் வருமாறு:—

மூன்று மொழிகளை, உயர்நிலைப் பள்ளி நிலையில் மாணவர்கள் கட்டாயமாகப் படிக்க வேண்டும்.

1. (அ) தாய்மொழி; (ஆ) அல்லது வட்டார மொழி; (இ) அல்லது, தாய்மொழி—வட்டாரமொழி இரண்டின் கூட்டுப் படிப்பு; (ஈ) தாய்மொழி—தொன்மைச் சிறப்பு மொழி இரண்டின் கூட்டுப் படிப்பு; (உ) அல்லது வட்டார மொழி—தொன்மைச் சிறப்பு மொழிஇரண்டின் கூட்டுப் படிப்பு.
2. ஆங்கிலம்.
3. இந்தி (இந்தி வழங்காத பகுதிகளுக்கு) தற்கால இந்திய மொழி ஒன்று (இந்தி வழங்கும் பகுதிகளுக்கு)

இப்படி, இந்தி உட்பட மூன்று மொழிகளையும் கட்டாயபாடமாகப் படிக்கவேண்டும் என்று திட்டம் கூறுகிறது.

தோழமை பிறக்க வழி என்ன?

பேதங்கள் ஒழிய வேண்டும்; ஒருவரை ஒருவர் மதிக்க வேண்டும்

அண்ணா ஆய்வுரை

18-11-56-ல் சென்னை கோகலே மண்டபத்தில், திரு. பி. டி. இராசன் தலைமையில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் அண்ணா அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் மற்றொரு பகுதி இங்கு தரப்படுகிறது:—

"திரு. பி. டி இராசனும் மற்ற தலைவர்களும் இந்த நாட்டு மக்களின் துரோகிகள் என்று கூறுகிறார்கள்; அப்படி அவர்கள் என்னதான் துரோகம் இழைத்து விட்டார்கள்? விளக்கிக் கூறுவார்களா குற்றம் சாட்டுவோர்?

"'பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைக் காப்பாற்றுவதற்காக பி. டி. இராசன் போன்றவர்கள் யுத்த காலத்தில் பாடுபட்டார்கள்' என்று கூறுகிறார்கள்.

பேருண்மையை அறியாரோ?

"பி. டி. இராசன் போன்றவர்கள், பிரிட்டன் யுத்தத்தில் வெற்றி பெற வேண்டும் என்று விரும்பியது, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைக் காப்பாற்றுவதற்காக அல்ல; ஏகாதிபத்தியத்தைவிடக் கொடியதும் தீங்கு பயப்பதுமான பாசிசத்திற்கும் நாசிசத்திற்கும் எதிராகத்தான் பாடுபட்டார்கள்; அப்போதுகூட, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு உதவினார்கள் என்பதல்ல—நேச நாடுகளின் பக்கம் நின்றார்கள், இராசன் போன்றவர்கள்!

'பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைவிட, பாசிசமும் நாசிசமும் கொடியவை—கேடு பயப்பவை என்ற பேருண்மையின் பக்கத்தில் நின்றதற்காகவா இராசனைப் போன்றவர்களைத் தூற்றுகிறார்கள்?

"பி. டி. இராசன் அவர்களுக்கு, யுத்த காலத்தில் அவர் பிரிட்டிஷாருக்கு உதவினார் என்பதற்காக அல்ல, பட்டங்களும் புதிய பதவிகளும் தரப்பட்டது! இன்னும் சொல்லப்போனால், அவர் அதற்குப் பிறகுதான பல தொல்லைகளுக்கும் கஷ்ட நஷ்டங்களுக்கும் ஆளாகினார்.

"ஆனால், இந்த உண்மையைத் தெரிந்திருந்தும் சில அரசியல் சூதாட்டக்காரர்கள், அரசியல் இலாப வேட்டையாடுவதற்காகப் பண்புகெட்ட வகையில் இராசன் அவர்களையும் இதரர்களையும் தூற்றித் திரிகிறார்கள்.

ரோஜாப்பூ யுத்தம்

"இங்கிலாந்து நாட்டில், 'ரோஜாப்பூ யுத்தங்கள்' என்று வர்ணிக்கப்படுகிற பிரபுக்களின் இரு பிரிவாரிடை நடைபெற்ற சண்டைகள் நடைபெற்ற காலந்தொட்டு, படிப்படியாகப் பல நூற்றாண்டுக் காலத்திற்குப் பிறகுதான் இன்றுள்ள ஜனநாயக ஆட்சி நடைபெறுகிறது.

"கட்சிப் பிரதி கட்சி அரசியல் இன்று அங்கு உரம்பெற பல ஆண்டுகள் தேவைப்பட்டன.

"அந்த நிலையை இந்த நாட்டில் ஒரே நாளில் உருவாக்கிவிட முடியாது; படிப்படியாகத்தான் உருவாக்க முடியும்.

"இன்று ஆளும் கட்சியாக உள்ள காங்கிரஸ், தனக்குச் சமமான எதிர்க்கட்சி இல்லை என்று மமதையோடு ஆட்சி செலுத்துகிறது. இந்த நிலை ஜனநாயகத்திற்குக் கேடு பயப்பது என்பதால்தான், நல்லதோர் எதிர்க்கட்சியை உருவாக்க தி. மு. கழகம் முன்வந்திருக்கிறது; 150 இடங்களில் வரப்போகும் தேர்தலில் கழகம் போட்டியிடப்போகிறது.

"பழனியாண்டவனைத் தரிசிப்பது என்றாலும், பழனி மலைப்

(4-ம் பக்கம் பார்க்க)

காங்கிரஸ் துரோகத்தை மறைக்க!

இந்திரா புதிய 'தலை' தயாரிக்கிறார்

மொழிவழி மாநிலக் கிளர்ச்சிகள் அந்நியரின் பண உதவியால் நடைபெற்றனவாம்!

அலகாபாத், நவ. 19—

"மாநில புது அமைப்பை ஒட்டி, இந்தியாவில் அண்மையில் நடைபெற்ற கிளர்ச்சிகளில் சில பணக்கார நாடுகளுக்கும் பங்கு உண்டு"

என்று நிச்சயமான தகவல் கிடைத்திருப்பதாக திருமதி இந்திரா காந்தி கூறியிருக்கிறாராம்!

"இந்த நாடுகள், குழப்பமூட்டுவதற்காகப் பணம் அனுப்பிதந்தன" என்றும் அவர் கூறினாராம்!

"காங்கிரஸ், நாட்டில் ஒரு 'சோஷலிச மாதிரி' சமூகத்தை நிறுவத் திட்டமிட்டிருக்கிறது; ஆனால் இதனை சில நாடுகளின் பின்பலத்தோடு சுயநலமிகள் சிலர் நிச்சயம் எதிர்க்கிறார்கள்" என்றும் கூறினாராம் இந்திரா!

அகர்வால் கல்லூரி மாணவர் சங்கத்தைத் துவக்கி வைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு பேசினாராம்.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

சென்னை 21—11—'56 புதன்

அரிசிப் பஞ்சம்!

யுத்த காலத்தில் உணவுப் பொருள்களுக்குப் பஞ்சம் ஏற்பட்டபோது 'ரேஷன்' அமுலாக்கப்பட்டது. அந்த நாட்களில், அளந்து பங்கிட்டுத் தரப்பட்ட அரிசி முதலிய உணவுப் பொருள்களை வாங்கிச் செல்வதற்காக, குறிப்பிட்ட கடைகளில் மக்கள் மணிக் கணக்கில் காத்திருப்பர்.

கொளுத்தும் வெயிலில் மக்கள் ஆண்களும் பெண்களுமாய் காத்திருக்கும் காட்சிகளை இப்போது நியாய விலைக் கடைகளில் தரப்படும் அரிசியை வாங்குவதற்காகக் காத்திருக்கும் மக்கள் கூட்டம் நினைவு படுத்துவதாக அமைந்துள்ளது.

இந்த நிலைமையை 'இந்து' இதழ் புகைப்படம் வெளியிட்டு விளக்கிக் காட்டியிருக்கிறது, வியத்தோடு!

அரிசி விலை ஏறி வருகிறது விஷம் போல என்ற செய்தி, மந்திரிமார்களின் கவனத்தை ஈர்க்கவே பல நாட்கள் தேவைப்பட்டன. 'ஆராய்ந்து வருகிறோம் காரணங்களை; கண்டுபிடித்து விட்டோம் அவற்றை! நடவடிக்கைகளை மேற்கொள்ளுவது பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறோம்' என்று மந்திரிமார்கள் பேசிக்கொண்டிருக்கும் போதே, மக்களின் கைக்கு எட்டாத அளவுக்கு விலைவாசிகள் ஏறிக்கொண்டிருந்தன. நிலைமை முற்றிவிட்டபின் வேறு வழியில்லாத காரணத்தால், 'நியாய விலைக் கடைகள் மூலம் அரிசி தரப்போகிறோம்' என்றனர்.

கிடங்குகளில் புதைத்து வைக்கப்பட்டு, புழுத்து நாற்ற மடித்துப்போன அரிசி, நியாய விலைக் கடைகளுக்கு இடம் பெயர்ந்தது; நியாய விலைக் கடைகளில் கிடைக்கும் அரிசியின் தரக்குறைவு, வெளியிடங்களில் கிடைக்கும் அரிசியின் விலையை மேலும் ஏறச்செய்யப் பயன்பட்டதே தவிர, மந்திரிமார்கள் கூறியபடி, விலைகளை இறக்குவதற்குப் பயன்படவில்லை.

தங்களின் சக்திக்கு மீறிய அளவுக்கு விலைகள் ஏறிவிட்டதால், சாதாரண நடுத்தர ஏழை-எளிய மக்கள், 'நாற்றமடித்தாலும் பரவாயில்லை' என்ற கருத்தில் நியாய விலைக் கடைகளை முற்றுகையிடத் துவங்கியுள்ளனர்.

இந்த நேரத்தில்தான், மந்திரி பக்தவத்சலனர் அபாயச் சங்கு ஊதுகிறார்—'அரிசி இல்லை எம்மிடம்; நியாய விலைக் கடைகள் காலியாகி வருகின்றன. டில்லி எஜமானர்களுக்கு மனுச் செய்திருக்கிறோம்' என்று. ஒன்பதாண்டுக் கால 'சுயராஜ்யம்' மக்களுக்கு வழங்கும் மற்றுமோர் பரிசுதான் இப்போது தலைதூக்கும் அரிசிப் பஞ்சம் போலும்.

இந்தப் பஞ்சம்பற்றி சங்கூதும் இதே மந்திரி பக்தவத்சலனர்தான் கடந்த கிழமை இறுதியில் கூறினர் 'இந்த மாநிலத்தில் அரிசி உற்பத்தி போதிய அளவிற்கு இருக்கிறது. ஆனல், மற்ற மாநிலங்களின் தேவையே, இங்கு அரிசி விலை உயர்வுக்குக் காரணமாயிருக்கிறது" என்று எப்படி இருக்கிறது பார்த்தீர்களா நிலைமை?

இந்த மாநிலத்தின் அரிசி உற்பத்தி, இந்த மாநிலத்திற்குப் போதுமானதுதானும். ஆனல் இந்த உற்பத்தியில் மற்ற மாநிலங்களுக்கும் பங்கு தர வேண்டியிருப்பதால்தான், இந்த மாநில மக்கள் ஒன்றுக்கு இரண்டு மடங்கு விலை தந்து அரிசி பெற வேண்டியுள்ளதாம். ஏனென்றல் இந்த மாநில மக்கள் எல்லாம், கொழுத்த வருமானமுடையவர்கள் — குபேர சம்பத்துப் படைத்தவர்கள் அல்லவா? அதனல்தான் போலும், இந்த நிலைமை!

இப்போது, தரப்பட்டுவந்த நாற்றமடிக்கும் மட்டரக அரிசி கூட நியாய விலைக் கடைகளில் கிடைக்காது என்றல், இந்த மாநில மக்களின் நிலைமை என்ன?

இந்த மாநிலத்தின் உற்பத்தியை அடுத்த மாநிலங்களுக்குத் தந்துவிட்டு, இங்குள்ள மக்கள், விலை ஏற்றத்தாலும், அரிசிப் பஞ்சத்தாலும் அவதிப்பட வேண்டியிருப்பது என்ன அவசியத்திற்காக? வெண்ணெயைக் கொடுத்துவிட்டு நெய்க்கு அலைவது புத்திசாலித்தனம் என்கிறரா, மந்திரி பக்தவத்சலம்?

டெல்லி எசமானர்களைக் கேட்டிருக்கிறராம் — 'அரிசிப் பஞ்சம் தோன்றிவிட்டது; ஐயன்மீர்! அருள்வீர்!'— என்று! அருள்பாலிக்கும் கருணமூர்த்திகள் தமது எசமானர்கள் என்று எண்ணுகிறரா, மந்திரி?

இன்பங்கள் என்றல் முதல் பங்கு வடநாட்டவருக்கு! துன்பங்கள் என்றல் சுமக்கவேண்டியவர் தென்னுட்டவர்— என்ற நிலை நிலைத்துவிட்டிருப்பதை கடந்த ஒன்பதாண்டு கால வரலாறு கூறுகிறதே! அறியாரா மந்திரியார்?

அரிசி, மற்றும் விவசாயப் பண்டங்களின் விலை வீழ்ந்த போது, இந்த நாட்டு விவசாயிகள் அவதிப்பட்டனர். கோதுமை விலை வீழ்ச்சியால் அவதிப்பட்ட வடநாட்டவரைத்தான், டில்லிப் பெரியவர்கள் காப்பாற்ற நினைத்தனரேயன்றி, தென்னுட்டு விவசாயிகளை அல்ல.

அதேபோல விலை ஏற்றக் கொடுமையால் அவதியுறும் தென்னுட்டு மக்களுக்கு இன்றுவரை உதட்டளவில்தான் டில்லிப் பெரியவர்கள் அனுதாபம் காட்டியிருக்கின்றனரே தவிர, உருப்படியாக ஏதும் செய்யவில்லை. மந்திரி பக்தவத்சலம் 'மனுப் போடும்' நிலைமைதான் இருக்கிறது.

நிலவும் அரிசிப் பஞ்சம், இந்த நாட்டு மக்களுக்கு எதை உணர்த்தினலும் உணர்த்தாவிட்டாலும், இந்த மாநில மந்திரிகள், மக்களின் நலன்களைப் பேணும் அக்கரை கொண்டவர்கள் அல்ல; தங்கள் பதவியை மட்டும் எப்படியேனும் காப்பாற்றிக்கொள்ள நினைக்கும் பதவிப் பித்தர்கள் என்பதை மட்டுமாவது நிச்சயம் உணர்த்தும்.

நிலைமை நெருக்கடிக் கட்டத்தைத் தொடுமுன், மந்திரிகள் செயலாற்ற வேண்டும். அரிசிப் பஞ்சம், மக்களின் அவதியைக் கூடுதலாக்காதவாறு தடுக்கவேண்டும்.

'ஹங்கேரியில் ரஷ்யாவின் தலையீடு தேவையற்றது — அதிக்கிரமமானது'

'ஹங்கேரி பற்றிய உண்மையை யோக்கியமான கம்யூனிஸ்டுகள் ஒதுக்கிவிட முடியாது'

'ரஷ்யத் துருப்புகள் கொன்று குவித்தது பாசிஸ்டுகளை அல்ல; ஹங்கேரிய மக்களைத்தான்'

'உண்மைச் செய்திகள் எல்லாம் இருட்டடிக்கப்பட்டு விட்டன'

பிரிட்டிஷ் கம்யூனிஸ்டு 'டெய்லி ஒர்க்கர்' பத்திரிகையின் தனி நிருபர் தகவல்

லண்டன், நவ. 18—

'ஹங்கேரியில் ரஷ்யா தலையிட்டது தேவையில்லாதது—அதிக்கிரமமானது' என்று, பிரிட்டிஷ் கம்யூனிஸ்டு கட்சியின் தின இதழான 'டெய்லி ஒர்க்கர்' பத்திரிகையின் சார்பில், புதாபெஸ்ட் அனுப்பப்பட்டிருந்த தனி நிருபரான பீட்டர் பிரியோர் என்பார் கூறியிருக்கிறர்.

அந்தத் தனி நிருபர், தான் புதாபெஸ்ட் நகரில் கண்டவை குறித்து அனுப்பித் தந்திருந்த உண்மைச் செய்திகளை, 'டெய்லி ஒர்க்கர்' இருட்டடிப்புச் செய்துவிட்டதால், தொடர்ந்து பதவியிலிருக்க தாம் விரும்பவில்லை என்று கூறி பத்திரிகையிலிருந்து விலகிவிட்டிருக்கிறர்.

'எந்த ஒரு யோக்கியமான கம்யூனிஸ்டும் ஹங்கேரி பற்றிய உண்மையை ஒதுக்கித் தள்ளிவிட முடியாது' என்றும், அவர் தனது இராஜிநாமாக் கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறர் என்றும் தெரிய வருகிறது.

பீட்டர் பிரியெர் என்பார் பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுக் கட்சியின் தினசரியான 'டெய்லி ஒர்க்கர்' பத்திரிகையின் பிரதம நிருபர் ஆவார்.

அவர் ஹங்கேரி நிலவரங்களை அறிந்துவருவதற்காக புதாபெஸ்டுக்கு அனுப்பப்பட்டார். ஆனல் அவர் இப்போது புதாபெஸ்டிலிருந்து திரும்பியதும், தான் அனுப்பிய செய்திகளை வெளியிடாததால் பதவியிலிருந்து விலகிக்கொண்டிருக்கிறர் என்று தெரியவருகிறது.

தனது இராஜிநாமாக் கடிதத்தில் அவர் குறிப்பிட்டிருப்பதாகக் கூறப்படுவதாவது:—

"'டெய்லி ஒர்க்கர்' பத்திரிகையின் விசேட நிருபர் என்ற முறையில் நான் மூன்று முறை புதாபெஸ்டிலிருந்து செய்திகள் அனுப்பினேன்.

"அவற்றில் இரண்டு, நானே நேரில் புதாபெஸ்ட் நகரில் கண்டறிந்த உண்மைகளடங்கியவை; அவை வெளியிடப்படவில்லை; இருட்டடிப்புச் செய்யப்பட்டன

"மூன்றவது செய்தி, ஹங்கேரியில் கடந்த மூன்றண்டுகளாகவே வாழ்ந்துவரும் பிரிட்டிஷ் கம்யூனிஸ்டு ஒருவரை நான் பேட்டி கண்டு எழுதிய கட்டுரையாகும். இதில் முக்கியமான பகுதிகள் பலவற்றையும் வெட்டிவிட்டார்கள்— பிரசுரிக்கவில்லை; இருட்டடிப்புச் செய்துவிட்டனர்.

"பத்திரிகையின் ஆசிரியர், நான் அனுப்பிய செய்திகளை அலுவலகத்தில் உள்ள ஊழியர்கள் கூடப் பார்க்கக்கூடாது என்று தடுத்துவிட்டிருக்கிறர்.

"ஹங்கேரியில் ரஷ்யா தலையிட்டது தேவையில்லாதது—அக்கிரமமானது என்பதில் எனக்குச் சந்தேகமேயில்லை.

"எந்த ஒரு யோக்கியமான கம்யூனிஸ்டும், ஹங்கேரி பற்றிய உண்மையை ஒதுக்கிவிடுவதற்கில்லை.

எதிர்ப் புரட்சி

"ஹங்கேரியில் எதிர்ப் புரட்சி தோன்றக்கூடிய அபாயம் இருக்கத்தான் செய்தது

"ஆஸ்திரிய கம்யூனிஸ்டுகள் 'நவம்பர் 4-ந் தேதிக்குமுன் சுமார் 2,000 பேர்கள் அமெரிக்கரால் பயிற்றுவிக்கப்பட்டு ஆயுதபாணிகளாக்கப்பட்டு கிளர்ச்சியிலீடுபடுவதற்காக மேற்கு ஹங்கேரிக்கு அனுப்பப்பட்டனர்' என்று என்னிடம் கூறினர்.

"ஆனல் ஹங்கேரியில் பலம் எல்லாம் ஆயுதம் தரித்த மக்கள் வசம் இருந்தது. அவர்கள் (எதிர்ப் புரட்சியை)ஒடுக்குவதின் ஆபத்தை உணர்ந்திருந்தனர்.

மக்கள் விரும்புவதென்ன?

"ஹங்கேரிய மக்கள், மீண்டும் முதலாளித்துவம் நிலைநிறுத்தப்பட வேண்டுமென விரும்பவில்லை; அவர்கள், கடந்த 12 ஆண்டுக் காலத்தில் அடைந்துள்ள மகத்தான சாதனைகளைக் காப்பாற்ற வேண்டும் என்றே விரும்புகின்றனர்.

ரஷ்யத் துருப்புகள் யாரைக் கொன்றன?

"புதாபெஸ்டிற்குள் நுழைந்த ரஷ்யத் துருப்புகள் எவரைக் கொன்று குவித்தன? 'எதிர்ப் புரட்சி'க்காரர்களையா? அல்ல! அல்ல!

"பாசிஸ்டுகளையா? அல்ல! அல்ல!

"ஹங்கேரிய மக்களை, தொழிலாளர்களை, போர் வீரர்களை, மாணவர்களைத்தான் ரஷ்ய இராணுவம் கொன்று குவித்தது.

"ரஷ்ய இராணுவத்தோடு, ஒரு ஹங்கேரிய வீரன்கூட பக்கத்தில் நின்றுகொண்டு, 'கலக'த்தை அடக்கவில்லை.

"இந்த உண்மைகளை, 'டெய்லி ஒர்க்கர்' வெளியிட மறுத்துவிட்டாலும், தான் வேறு வழிகளில் ஹங்கேரி பற்றிய உண்மையை வெளியிடப் போகிறேன்."

இலட்சணமே இலட்சணம்!

சென்னை, நவ. 19—

'சென்னை மாநிலத்தில் ஏராளமான நியாய விலைக் கடைகள் திறந்துள்ளோம்; ஏராளமான அரிசி இறக்குமதியாகிறது; அரிசி விலை குறைந்துவிடும்' என்றெல்லாம் பேசி வந்தவர்கள், இப்போது உண்மையை உணர்ந்து, அதைப் பகிரங்கமாகச் சொல்லவும் முன் வந்துவிட்டனர்.

'நியாய விலைக் கடைகளில் அரிசி கிடைப்பதில்லை என்று மக்கள் அதிருப்தியடைந்திருப்பதை நான் அறிவேன். மத்திய அரசாங்கத்திடம் அரிசி அனுப்பும்படி வேண்டியுள்ளேன்;" என்று, சென்னை அமைச்சர் பக்தவத்சலம் கூறியுள்ளார்.

சொன்னதைச் சொல்லும்

கிளிப்பிள்ளையாகிறர் ஏ. கே. கோபாலன்!

புதுடில்லி, நவ. 19—

ரஷ்யத் துருப்புகளைத் திரும்பப் பெறவேண்டும் என்று கோரி, ரஷ்யாவின் தாசானுதாசர்களாக ஹங்கேரியின் ஆட்சியிலிருப்போருக்கு எதிராகத் தோன்றிய தேசிய எழுச்சிதான் ஹங்கேரிச் சம்பவங்களுக்குக் காரணம் என்பதை ஒப்பினலும், கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் ஏ. கே. கோபாலன் தனது மாஸ்கோ எஜமானர்கள் ஒப்பித்திருக்கிறபடி, 'ஹங்கேரி கலவரத்திற்கு எதிர்ப்புரட்சிக்காரர்கள், மற்றும் ஏகாதிபத்திய ஏஜெண்டுகள் ஆகியோரின் தூண்டுதலே காரணம்,' என்ற பாடத்தையும் கிளிப்பிள்ளைபோல மக்கள் சபையில் ஒப்பித்திருக்கிறர் என்று தெரியவருகிறது.

ரஷ்யாவுக்கு இந்தியக் கம்பளம் ஏற்றுமதி

புதுடில்லி, நவ. 19—

2,50,000 கெசம் கம்பளத்தை இந்தியாவிடமிருந்து ரஷ்யா வாங்குவதற்கு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளதாக மத்திய வர்த்தக அமைச்சர் மக்கள் சபையில் அறிவித்துள்ளார்.

பிளவு ஏற்படுத்த முயல்கிறராம்!

மாஸ்கோ, நவ. 19—

கம்யூனிஸ்டு நாடுகளுக்கிடையே பிளவு ஏற்படுத்த யூகோ நாட்டின் மக்கள் தலைவர் டிட்டோ முயல்வதாக சோவியத் கம்யூனிஸ்டு கட்சி இதழான 'பிராவ்டா' குற்றம் சாட்டியுள்ளது.

டிட்டோவின் பேச்சு, மற்ற கம்யூனிஸ்டு நாடுகளின் விவகாரங்களில் தலையிடுவதாக உள்ளதென்றும், பிற்போக்கு பிரசாரத்திற்கு இடமளிப்பதாக இருக்கிறதென்றும், அவருடைய செயல் மார்க்ஸ்—லெனின் தத்துவத்திற்கு முரணனது என்றும் அந்த இதழ் கூறியுள்ளதாம்.

அந்த 'இரகசியம்'!

போலந்திலும் ஹங்கேரியிலும் ஏற்பட்டது போன்ற 'உள்நாட்டுக் குழப்பங்'கள் ஏற்படாமல் தடுக்கவும், ஏற்பட்டால் அவற்றைச் சமாளிக்கவுமே ரஷ்யத் துருப்புகள், பல்கேரியாவுக்கு வந்திருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது.

பல்கேரியா, வார்சா ஒப்பந்தத்தில் ஈடுபட்ட நாடு என்றலும், இதுவரையில் அங்கு ரஷ்யத் துருப்புகள் இருந்ததில்லை; ருமேனியா, ஹங்கேரி இங்கெல்லாம் ரஷ்யத் துருப்புகள் இருக்கின்றன.

குடந்தையில் 50,000 மக்கள் கொண்ட மாபெரும் கூட்டம்

கருப்பூரில் வீதிகள் தோறும் கழகக் கொடிகள் உயர்த்தப்பட்டன

அண்ணா, என். வி. நடராசன் கலந்துகொண்டனர்

குடந்தையில் 12-11-56 மாலை தி. மு. கழக மாணவர் கிளையின் சார்பில், அரண்மனைத் தோட்டத்தில் நடைபெற்ற மாபெருங் கூட்டமும், அன்று காலை, கருப்பூரில் வீதிகள்தோறும் கழகக் கொடிகளை உயர்த்திய காட்சியும் குடந்தை அரசியல் வரலாற்றில் குறிப்பிடத்தக்கதாகும்.

கருப்பூரில் :

காலை 11-30 மணிக்கு, குடந்தையை அடுத்த கருப்பூரில் 15 இடங்களில் அண்ணா அவர்களால் கழகக் கொடிகள் ஏற்றுவிக்கப்பட்டன. அவ்வூரின் முக்கிய வீதிகள் எல்லாம் தோரணங்களாலும், வளைவுகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது, விழாபோல் காட்சியளித்தது.

அண்ணா அவர்களையும் தோழர்கள் என். வி நடராசன், கே. கே. நீலமேகம், திருச்சி மாவட்டச் செயலாளர் அம்பில்-தருமலிங்கம் ஆகியோரையும் ஊர்வலமாக அழைத்துச் சென்றனர்.

வழிநெடுக அண்ணா அவர்களுக்குக் கழகத் தோழர்களால் ஏராளமான மாலைகள் அணிவிக்கப்பட்டன.

பிற்பகல் 2 மணிக்கு, கருப்பூர் தி. மு. கழகக் கட்டிட கல்நாட்டு விழாக் கூட்டம் தோழர் பொன்னுசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர் காளிதாஸ் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். அடுத்து, தோழர்கள் கே. கே. நீலமேகம், என். வி. நடராசன் ஆகியோர் பேசியபின், அண்ணா அவர்கள் கழகக் கட்டிட கல்நாட்டு விழாவைத் துவக்கிவைத்துச் சொற்பொழிவாற்றினார்கள்.

குடந்தையில் :

மாலை 6 மணிக்கு குடந்தை அரண்மனைத் தோட்டத்தில் குடந்தை தி. மு. கழக மாணவர் கிளையின் சார்பில் மாபெருங்கூட்டம் நடைபெற்றது. ஐம்பதாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் திரண்டிருந்தனர். மாணவர் கிளையின் தலைவர் தோழர் பூபாலன் தலைமைவகித்தார்.

அடுத்து, மாணவத் தோழர்கள் தங்கதுரை, அயூப்கான் ஆகியோரும், தோழர்கள் கே. கே நீலமேகம், அம்பில் தர்மலிங்கமும் காங்கிரஸ் ஆட்சியின் அநீதிகளை விளக்கிப் பேசினர்.

பின்னர், துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நமது தாயகம் புறக்கணிக்கப்பட்டிருப்பதைக் குறிப்பிட்டுப் பேசினார்.

இறுதியாக அண்ணா அவர்கள், மாணவர்கள் தங்களுடைய கல்வித் துறையின் தரத்திற்குக் குறைவு ஏற்படாதவகையில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்குத் துணையாய் இருந்து வரவேண்டியதை விளக்கியும், தற்கால அரசியல் நிலைமை பற்றியும், அடுத்து நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஆதரவு தருமாறுவேண்டியும் சொற்பொழிவாற்றினார்கள்.

தலைவர் முடிவுரைகூற கூட்டம் இனிது முடிவுற்றது.

டில்லி ஆட்சியிடம்!

சென்னை சர்க்கார் மானியம் கேட்டிருக்கிறதாம்!

சென்னை, நவ. 18—

பின்தங்கியவர்களின் முன்னேற்றத்திற்காகக் காங்கிரஸ் பாடுபடுகிறது என்றும், வரும் பொதுத் தேர்தலில் காங்கிரசையே ஆதரிக்க வேண்டும் என்றும், சேரி ஒழிப்பு திட்டத்திற்காகவும், பின்தங்கிய வகுப்பினருக்கு இடவசதி உண்டாக்கவும், சென்னை அரசாங்கம், மத்திய அரசாங்கத்திடம் ரூ. 4½ கோடி மானியம் கேட்டுள்ளது என்றும் அரிசன அமைச்சர் பரமேசுவரன் தென் சென்னை சேரி வாழ்வோர் மாநாட்டில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

பக்தியில்லாத சமுதாயம் உருப்படாதாம்!

ஆச்சாரியார் கூறுகிறார்

சென்னை, நவ. 18—

திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயிலில் ஆச்சாரியார் பேசுகையில், மலிவான விலையில் 'திவ்விய பிரபந்தம்' வெளியிட்டுள்ளதைப் பாராட்டி, தூய தமிழைக் கொண்டு பக்தி மார்க்கம் காட்டுவதைவிட பிறமொழிக் கலப்புடன் செய்வதில் பலனுண்டு என்றும், பக்தி இல்லாத சமுதாயம் உருப்படாது என்றும் கூறியுள்ளார்.

புதுவை மாநிலத்தில் தொழில் திட்டங்கள்

சென்னை, நவ. 17—

ஆண்டுக்கு 2,00,000 டன் சிமெண்டு உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலை ஒன்று புதுவையில் திறுவப்படுமாம்.

1,000 டன் சர்க்கரை தயாரிக்கும் தொழிற்சாலை திறவும் திட்டமொன்றும் உருவாக்கப்பட்டுள்ளதாம்.

மேலும் விளையாட்டுப் பொம்மைகள், தீக்குச்சிகள், தோல் சாமான்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகளும் புதுவையில் ஏற்படுத்தும் திட்டம் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் இடம் பெற்றுள்ளதாம்.

பத்ராவதி உருக்கு ஆலை

உற்பத்தி எல்லை உயருகிறது

புதுடில்லி, நவ. 19—

1957 ஜுன் மாதம் முதல் பத்ராவதியில் உருக்கு ஆலை வேலை செய்யத் துவங்கிவிடுமாம். தற்போது இந்தத் திட்டம் பரவலாக்கப்படுகிறது.

10,000 டன் குழாய்கள் தயாரிப்பு 22,500 டன்னாகவும் 24,000 டன் தேனிரும்பு உற்பத்தி 1,00,000 டன்னாவும், 39,000 டன் உருக்கு சாதன உற்பத்திக் கருவிகள் தயாரிப்பு 85,000 டன்னாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

துணைப் பொதுச்செயலாளர்

என். வி. நடராசன்

சுற்றுப்பயண நிகழ்ச்சிகள்

களம்பூர், நவ. 20—

ஆரணி அடுத்த களம்பூர் தி மு. கழகச் சார்பில் 16—11—56 மாலை 6-30 மணிக்கு தருமராசா கோயில் திடலில் தோழர் கே. என். சிவநேசன் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது உள்ளூரிலிருந்தும் சுற்றுப்புற ஊர்களிலிருந்தும் ஏராளமான தோழர்கள் வந்திருந்தனர்.

தோழர்கள் அண்ணாமலை, கருத்தோவியன் ஆகியோர்சிறிதுநேரம் பேசினபின், துணைப் பொதுச்செயலாளர் என். வி நடராசன் அவர்கள் காங்கிரஸ் ஆட்சி ஏழை—நடுத்தர மக்களுக்கு விளைவித்து வரும் அநீதிகளை சுட்டிக் காட்டியும், அவைகளை ஒழித்து நல்லதோர் ஆட்சி முறையை உருவாக்குவதற்கு எதிர்க் கட்சியாய் நின்று பணியாற்ற அடுத்து நடைபெறும் பொதுத் தேர்தலில் தி மு. கழகத்தை ஆதரிக்க வேண்டியதை விளக்கியும் சொற்பொழிவாற்றினார்.

தோழர் தங்கவேல் நன்றிகூறினார்.

பல கிளைகளின் சார்பில் துணைப் பொதுச்செயலாளருக்கு மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டன.

கொத்தவாச்சேரி :

புவனகிரி அடுத்த கொத்தவாச்சேரி தி. மு. கழகச் சார்பில், 17—11—56 மாலை 6-30 மணிக்கு பொதுக்கூட்டம் நடைபெற்றது. துவக்கத்தில் ஊர்வலம் புறப்பட்டு கூட்டம் நடைபெறும் இடத்தில் முடிவுற்றது.

கூட்டத்திற்கு தோழர் பழனியப்பன் தலைமை வகித்தார் தோழர்கள் இராமகிருஷ்ணன், நாராயணசாமி, வைர. கனகசபை ஆகியோர் பேசியபின், தோழர் என். வி. நடராசன் அவர்கள் விவசாயத் தொழிலாளர்களின் அவல நிலையையும், காமராசர் ஆட்சியின் அக்கறையின்மையையும், விலைவாசிகள் விஷம் போல உயர்ந்துகொண்டே போவதால் ஏழை - நடுத்தர மக்கள் படும் தொல்லைகளையும் விளக்கியதோடு, இதற்கெல்லாம் காரணமாயுள்ள காங்கிரஸ் ஆட்சியினருக்கும் அக்கட்சியினருக்கும் அடுத்த தேர்தலில் பொதுமக்கள் தக்க பாடம் கற்பிக்கவேண்டும் என்றும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மேலும் ஆதரவு தந்து தேர்தல் பணியில் வெற்றியைத் தேடித் தருமாறும் குறிப்பிட்டுப் பேசினார்

பல கிளைகளின்சார்பில் துணைப் பொதுச்செயலாளருக்கும் மற்றத் தோழர்களுக்கும் மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டன.

ஜீவனும்ச மசோதாவில் ஒரு மாறுதல்

இந்துக்கள் ஜீவனும்ச, சுவீகார மசோதாவில் மாறுதல் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

விதவையாகிவிட்ட மருமகள், தன்னுடைய சொந்த சொத்தின் மூலமோ, அல்லது கணவன், தகப்பனார், தாயார், பிள்ளை அல்லது பெண்ணின் சொத்தின் மூலமோ வாழமுடியாது போனால், தன்னுடைய மாமனாரிடமிருந்து வாழ்க்கைக்கு ஜீவனும்சம் கோரலாம்.

தேர்தல் நிதி தாரீர்!

வரவு :		ரூ. அணா பை
முன் (19—10—56) இதழ்ப்படி.	....	4015—0—6

திருநெல்வேலியில்

தேர்தல் ஆய்வுக் குழுவினரிடம்		
தாழையூத்து-கே. எம். மீராசா	....	1—1—0
திருவனந்தபுரம்-நா. சு. பெருமாள்	....	1—8—0
பாளையங்கோட்டை-ஈ. இசக்கி	....	1—4—0
புவியஞ்சுவனம் தி. மு. க. கிளை	....	5—0—0
களக்காடு-எஸ். வேலன்	....	1—0—0
நாசரத்-ஜெயபால்	....	10—0—0
வெள்ளார்குழி தி. மு. கழகம்	...	5—0—0
நெல்லிக்குப்பம் தி. மு. கழகச் செயலாளர் சோழன்	....	2—0—0
9-11-56 அன்று மின்னும்பள்ளியில், தோழர் நடேசன்—தாயம்மாள் திருமணத்தின் போது, துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்களிடம்		
நாமக்கல்-செல்லப்பன்	....	1—0—0
,, சி. பெருமாள்	....	1—0—0
செல்லப்பம்பட்டி-இளங்கோ	....	1—0—0
மின்னும்பள்ளி-கந்தசாமி	....	1—0—0
,, வி. பெரியசாமி	....	1—0—0
எஸ். கருப்பண்ணன்	....	1—0—0
9-11-56 கிருஷ்ணபுரம் பொதுக்கூட்டத்தில் என். வி. நடராசன் அவர்களிடம்		
வாழைப்பாடி தி. மு. கழகம்	....	5—1—0
படையாச்சியூர் தி. மு. கழகம்	....	1—1—0
வாழைப்பாடி செயலாளர் மாணிக்கம்	....	1—0—0
10-11-56 அன்று அண்ணாமலைநகர் தி.மு.க. மாணவர் கிளை சிறப்புக் கூட்டத்தில் அண்ணா அவர்களிடம்	....	1011—0—0
தலைக்குளம் தி. மு. கழகச் சார்பில் அண்ணா அவர்களிடம்	....	201—0—0
கோபால் பிரதர்ஸ் (தையல் நிலையம்)	....	5—0—0
விரசோழபுரம்-குஞ்சிதபாதம்	....	10—0—0
சி. த. கங்காதரன் (1011 காலணா)	....	15-12—9
தஞ்சை தி. மு. கழகப் பொதுக்கூட்டத்தில் அண்ணா அவர்களிடம்	....	500—0—0
பூதலூர் தி. மு. கழகம்	....	10—0—0
களிமேடு தி. மு. கழகம்	....	21—0—0
தோழர் மோசேஸ்	....	1—0—0
நீடாமங்கலம் மாணவர் கிளை	....	7—2—3
9-11-56 மேலச்சேரி (தெ. ஆ.) தி. மு. க. பொதுக்கூட்டத்தில் அண்ணா அவர்களிடம்	....	25—0—0
11-11-56 திருச்சி தி. மு. க. மாணவர் கிளை சிறப்புக்கூட்டத்தில் அண்ணா அவர்களிடம்	....	750—0—0
,, கல்லுக்குழி-வி. இராமசாமி	....	2—1—9
,, ஐ. எம். ஷெரீப் (அரிசி மூலம்)	....	2—0—0
சென்னை கோகலே மண்டபத்தில் நண்பர்கள் கழகச் சிறப்புக் கூட்டத்தில் அண்ணா அவர்களிடம்	....	1111—0—0
ஆக மொத்தம்	ரூ.	7,727—0—3

குறிப்பு :—நிதி அனுப்பி வைக்கவேண்டிய முகவரி :—
போதுச்செயலாளர்—தி. மு. கழகம்
'அறிவகம்', இராயபுரம், சென்னை-13

வளங்கொழிக்கும் வடக்கில் கனரகத் தொழிற்சாலை!

இந்தியா-பிரிட்டன் கூட்டு முயற்சி

சிமெண்டுத் தொழிலுக்கான இயந்திரங்கள், சுரங்க இயந்திரங்கள், பம்புகள், சாமான் தூக்கிகள், மண்வாரிகள்; விசைச் சாதனங்கள் போன்ற கனரகச் சாதனங்களை உற்பத்தி செய்ய, மேற்கு வங்கத்திலுள்ள துர்காபூரில் ஓர் தொழிற்சாலையை திறவ முடிவு செய்திருக்கிறார்கள்.

வைக்கர்ஸ் லிமிடெட் பாப்காக்ஸ்-வில்காக்ஸ் லிமிடெட் எனற இரு பிரிட்டிஷ் நிறுவனங்களும், பம்பாயைச் சேர்ந்த அசோசியேட்டட் சிமெண்டு கம்பெனியும் கூட்டாகச் சேர்ந்து இந்தத் தொழிற்சாலையை திறவத் திட்டமிட்டிருக்கின்றன; டில்லி ஆட்சியின் அனுமதி கிடைத்ததும் கட்டிட வேலை தொடங்கப்படும்.

தொழிலாளர் குடும்பங்களுக்கும்

மருத்துவ வசதி

70 இலட்சம் பேர் பயன் பெறுவார்களாம்

புதுடில்லி, நவ. 19—

தொழிலாளர்களுக்கான அரசாங்க இன்சூரன்ஸ் திட்டத்தின் கீழ், இன்சூர் செய்துகொள்ளும் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கும் மருத்துவ வசதியளிக்க இந்திய அரசாங்கம் முடிவு செய்துள்ளதாம்.

இந்தத் திட்டத்தின் மூலம் சுமார் 70 இலட்சம் பேர் நன்மையடைவார்கள் என்று உதவி தொழில் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

சாதுக்களும் ஓட்டுரிமை கேட்கின்றனர்!

பீகார், நவ 19—

இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும் 200-க்கு மேற்பட்ட சாதுக்களும் சந்நியாசிகளும் கூடி, சாதுக்களுக்கும் சந்நியாசிகளுக்கும் ஓட்டுரிமை அளிக்கப்பட வேண்டுமென்றும், சொத்துக்கள் உடைய சாதுக்களுக்கு வருமான வரி விதிக்க வேண்டுமென்றும் கோரியிருக்கின்றனர்.

நெய்வேலித் திட்டம்

தென்னாட்டு மக்கள் அதிருப்தி?

புதுடில்லி, நவ. 19—

நெய்வேலியில் பழுப்பு நிலக்கரி தோண்டி எடுக்கும் வேலை தாமதப்படுவதைக் குறித்து தென்னாட்டு மக்கள் அதிருப்தி அடைந்துள்ளனர் என்று மக்கள் சபையில், உறுப்பினரொருவர் எடுத்துக் கூறியதற்கு, உற்பத்தி அமைச்சர் பதிலளிக்கையில், 'அவசியமான இயந்திரச் சாதனங்களும் கருவிகளும் வந்து சேர்ந்தபின் வேலை ஆரம்பமாகும்' என்று குறிப்பிட்டார்.

கைத்தறி நெசவாளரைப் பற்றிய கவலை

மத்திய அமைச்சருக்கு இல்லை?

புதுடில்லி, நவ. 19—

கைத்தறி துணிகளின் நன்மையைக் கருதி நூல் விலையைக் குறைத்தல் வேண்டுமெனக் கேட்கப்பட்டபோது, கைத்தறி நெசவாளரைக் குறித்துத் தனக்குக் கவலை இல்லை என்றும், அவர்கள் கூட்டுறவு சங்கங்களையே நம்பி வாழ வேண்டும் என்றும் மத்திய அமைச்சர் மொரார்ஜி தேசாய் பதிலளித்துள்ளார்.

அண்ணு ஆய்வுரை

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

படிக்கட்டுகளை ஏறித்தானே ஆகவேண்டும்? அதுபோலத்தான், நல்ல ஜனநாயக ஆட்சி அமையவும் பல கட்டங்களைத் தாண்டியாக வேண்டும்.

"இந்த ஜனநாயகக் கடமையாற்றத்தான், வெற்றி தோல்வி பற்றிக் கவலைப்படாமல், தி மு கழகம் முன் வந்திருக்கிறது.

மாமேதைகள் மறுத்தனர்

"ஜெயப்பிரகாஷ் நாராயணன், 'எதிர்க் கட்சி வேண்டும்' என்று கூறியிருக்கிறார். ஆனால், அவரது ஆழ்ந்த அறிவுரையை, அவர் துறவறக் கோலத்தில் இருந்து கொண்டு தருவதுதான் நமக்குக் கவலை எல்லாம். 'எதிர்க் கட்சி தேவை என்கிறீர்களே! நீங்களே அமைப்பீர்களா?' என்று அவரைக் கேட்டால், 'நான் துறவி; பூதானத்திற்கு என் வாழ்வைத் தந்துவிட்டேன்; அரசியலுக்கு அவ்வப்போது நான் கொஞ்சம புத்தி தானம் மட்டுமே தரமுடியும்', என்று கூறிவிடுகிறார்.

'ஆச்சாரியாரும் கூறுகிறார்—'எதிர்க்கட்சி வேண்டும்' என்று! அவரையும் கேட்கிறார்கள் கிருபர்கள்—'நீங்களே அமைப்பீர்களா?'—என்று! 'என்ன எனக்கு வேறு வேலை இல்லை என்று நினைத்து விட்டீர்களா?' என்று அவர் பதில் தருகிறார்.

சாமானியர்கள் முயற்சிக்கிறோம்

"இப்படி, மாபெரும் மேதைகள் எல்லாம், எதிர்க் கட்சி வேண்டும் என்று கூறினாலும், எதிர்க்கட்சியை உருவாக்க மறுத்துவிடுவதால்தான் நம்மைப்போன்ற சாமானியர்கள் ஜனநாயகக் கடமைகளைச்செய்ய முந்தவேண்டியுள்ளது

'நமது இந்தச் சிறிய முயற்சிக்கு எதிர்க்கட்சி தேவை என்று கூறும் மேதைகள் எல்லாம், வெறும் தார்மீக ஆதரவை மட்டுமே தருவார்களேயானால் அது எங்களுக்கல்ல—நாட்டுக்கு, அரசியலுக்கு, ஜனநாயகத்திற்கு இலாபம்!

"காங்கிரஸ் கட்சி இதர கட்சிகளை மதிப்பதில்லை என்று கூறுகிறார்கள்; உண்மைதான். ஆனால காங்கிரஸ், மற்றக் கட்சிகளை மதிக்கும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. இங்கு, எதிர்க்கட்சிகளே ஒன்றை ஒன்று மதிப்பதில்லை என்ற நிலைமை இருப்பதைக் காண்கிறோம்.

"தி. மு. கழகம் ஒரு நல்ல நிலைக்கு வந்தால் அது கம்யூனிஸ்டு கட்சிக்குப் பிடிக்காது; அவர்கள் ஒரு நிலைக்கு வருவது பி. சோ.-வுக்குப் பிடிக்காது. இப்படியே ஒவ்வொரு கட்சியும் மற்றக் கட்சிகளைப் பிடிக்காத நிலையில்தான் இருக்கின்றது.

நட்பும் தோழமையும் மலருவதெப்போ?'

"நாம் கூறுகிறோம்—'கட்சிகளுக்கிடையே ஒத்துழைப்பு இல்லாவிடினும் நட்பு இருக்க வேண்டும்; தோழமை இருக்க வேண்டும்,'—என்று! இதற்கு ஒருவரை ஒருவர் மதிக்கிற பண்பு இருக்கவேண்டும்.

"நமக்கு ஒரு கொள்கையில் பிடிப்பு இருக்கிறது என்றாலும், இதர கொள்கையில் பற்றுக்கொண்டவர்களை மதிக்கவேண்டும் என்று நாம் விரும்புகிறோம். இப்படி ஒருவருக்கொருவர் மதிப்பளித்தால் தான் நட்பும் தோழமையும் உருவாக முடியும்.

"அண்மையில் இங்கு அட்லி வந்தார். ஈடன் வந்திருந்தால் அவரோடு பிரிட்டிஷ் நாட்டு அதிகாரமும் கூடவந்திருக்கும். ஆனால் அட்லி வந்தபோது, அவருடன் அதிகாரம் வரவில்லை; என்றாலும் இங்குள்ளோர் அனைவரும் ஈடனுக்குத் தரக்கூடிய மதிப்பளித்து அவரை வரவேற்றார்கள்.

"காரணம், அட்லியுடன் அதிகாரம் வராவிட்டாலும், அவருடன் அந்த நாட்டு ஜனநாயகப் பாரம்பரியம் வந்தது என்பதால்தான்!

"இதுபோன்று, ஒவ்வொரு கட்சியினரும் செயற்கையான பேதங்களைப் பாராட்டாமல், ஒருவரை ஒருவர் மதிக்கும் தன்மை நாட்டில் வளர்ந்தால்தான் தோழமை, நட்பு மலரும்!

"நாம் இந்த நாட்டில் பேதமற்ற ஒரு சமுதாயத்தை உருவாக்க விரும்புகிறோம். சாதி, மதம், பொருளாதாரம், அரசியல் துறைகளில் இந்த நாட்டு மக்கள் பேதப்பட்டுக் கிடக்கிறார்கள்.

"ஒன்றே குலம், ஒருவனே தேவன் — என்று நாம் கொள்கை வகுத்திருப்பதின் காரணம், இந்த நாட்டு மக்கள் சாதியாலும் மதத்தாலும் பேதப்பட்டுக் கிடப்பதைப் போக்கத்தான்.

"பேதங்கள் நிலவுகிறவரை, பாராட்டப்படுகிறவரை, நட்பும் தோழமையும் மலரமாட்டா!

"ஒருவரை ஒருவர் மதிக்கும் பண்பின் முன்னிலையில்தான் தோழமை பிறக்கும்."

[நாளையும் வரும்]

காஷ்மீர் அரசியல் சட்டம்

கையெழுத்தாயிற்று

ஸ்ரீநகர், நவ. 20—

பலத்த கையொலிக்கிடையே காஷ்மீருக்கான புதிய அரசியல் சட்டம் அரசியல் நிர்ணய சபை உறுப்பினர்களால் கையொப்பமிடப்பட்டதாகத் தெரியவருகிறது.

சபைத் தலைவர், பிரதம மந்திரி பக்ஷிகுலாம் இருவரும் முதன் முதலாக ஓர் அரசியல் சட்ட நகலில் கையொப்பமிட்டிருக்கின்றனர்.

கையொப்பமிட்டபிறகு, உறுப்பினர்களிடம் பேசுகையில் பக்ஷி குலாம், 'பாகிஸ்தானோ, அமெரிக்காவோ, ஐ நா. சபையோ, உலகில் எந்த ஒரு சக்தியும் இந்த சுதந்திர சபை மேற்கொண்டுள்ள முடிவுகளை மாற்றவே முடியாது' என்று குறிப்பிட்டாராம்.

சென்னைக்கு வருகிறார்

புதுடில்லி, நவ. 20—

சென்னை - ஆந்திர எல்லைத் தகராறைத் தீர்த்துவைக்க நியமிக்கப்பட்டிருக்கும் மத்திய அரசாங்க சட்ட விவகார அமைச்சர் படாஸ்கர் டிசம்பர் 10-ந் தேதி சென்னை வந்து சேருவார் எனத் தெரிகிறது.

கேரளத்தில் புதிய கட்சி

கொல்லம், நவ. 19—

'கேரள மக்கள் கட்சி' என்று ஒரு புதிய அரசியல் கட்சி தோன்றியுள்ளது; இதில், முன்பு காங்கிரசில் இருந்தவர்களே பெரும்பாலும் உள்ளனர். இந்தக் கட்சிக்கு சங்கு பிள்ளை தலைவராக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.

புகை பிடிப்பதைத் தடை செய்யமாட்டார்களாம்

புதுடில்லி, நவ. 18—

'புகை பிடிப்பதை இந்தியா தடை செய்யப் போவதில்லை' என்று, மத்திய அமைச்சர் மொரார்ஜி கூறியுள்ளார்.

தேர்தல் நிதிக்கு அன்பளிப்பு

15—11—56 காலை, மேல்பட்டாம்பாக்கம் தி. மு. கழகச் சார்பில் புதியதொரு இடத்தில் கொடியேற்று விழா நடைபெற்றது; சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது; இதன் நினைவாக தேர்தல் நிதிக்கு ரூ. 2 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

ரூ. 20 இலட்சம் செலவில்!

குறைந்தவருமானமுடையோருக்கு வீடுகள் கட்டத் திட்டம்

சென்னை, நவ 20—

குறைந்த வருமானமுடையவர்களுக்கு வீடுகள் கட்டித் தருவதற்கான திட்டம் ஒன்றுக்கு ரூ 20 - இலட்சம் செலவிட சென்னை நகர சபைக்கு அனுமதி தரப்பட்டிருக்கிறதாம்.

ஐந்தாண்டுகளில் 360 வீடுகள் கட்டுவதற்கு நகர சபை 'கமிஷனர்' முன்பு திட்டம் தாக்கல் செய்திருந்தாராம்.

தொண்டையார்பேட்டை, கோடம்பாக்கம், மைலாப்பூர், ஷெனாய்நகர் ஆகிய இடங்களில் முதல் ஆண்டில் 90 வீடுகள் கட்டப்படும் என்றும், இதற்காக ரூ 5 இலட்சம் ஏற்கனவே நகரசபையிடம் தரப்பட்டுவிட்டது என்றும் தெரிய வருகிறது.

மாதம் ரூ. 500-க்குக் குறைந்த வருமானமுடையவர்களுக்கு இந்த வீடுகள் ஒதுக்கப்படும் என்றும், ஒரு வீடு கட்டுவதற்கான செலவு மதிப்பீடு ரூ. 8,000-க்கு மேல் இல்லை என்றும், 90 நகர சபை ஊழியர்களுக்கு இந்த வீடுகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன என்றும் தெரியவருகிறது.

தபால்—தந்தி ஊழியர்களுக்குக்

குடியிருப்பு வசதி

200 வீடுகள் கட்ட நடவடிக்கை

ஐதராபாதில் தபால்-தந்தி ஊழியர்களுக்காக அர்நகரத்தில், மொத்தம் 200 வீடுகள் கட்டப்படவிருக்கின்றன என்றும், அதற்கான நிலத்தை 'ஆர்ஜிதம்' செய்ய ஏற்கெனவே உத்தரவாகியுள்ளது என்றும் மக்கள் சபையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிக்கந்தராபாதில் 36 வீடுகளைக் கட்டுவதற்கானதொரு திட்டம் பரிசீலனையில் இருந்து வருவதாகவும், அவை 1957–58-ல் கட்டி முடிக்கப்படுமென்றும் எதிர்பார்க்கப்படுகிறதாகவும் மத்திய செய்திப் போக்குவரத்து அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மக்களை மாற்ற இயலாத கொள்கை!

புதுடில்லி, நவ. 19—

"ஹங்கேரி கம்யூனிஸ்டு நாடாக மாறி 10 ஆண்டுகளாகின்றன; இந்தப் பத்தாண்டு காலத்தில் மக்களை ஒரு கொள்கைக்கு மாற்ற முடியவில்லை என்றால், அது பெரிய தோல்வியேயாகும். இதிலிருந்து நாம் தெரிந்துகொள்ள வேண்டியதெல்லாம், நாம் பொதுவுடைமை வாதிகளா? அதன் எதிரிகளா? அல்லது வேறு கொள்கையை விரும்புபவர்களா? — என்று யோசிக்கவேண்டியவர்களாக இருக்கின்றோம்," என்று பண்டித நேரு மக்கள் சபையில் பேசுகையில் கூறியுள்ளார்.

ஓகோ, இது வேறா?

புதுடில்லி, நவ. 19—

'கதர், கிராமக் கைத்தொழில் கமிஷனை அரசாங்கம் விரைவில் ஏற்படுத்தும்,' என்றும் உற்பத்தி இலாகா உதவி அமைச்சர் மக்கள் சபையில் அறிவித்தார்.

உலக மக்கள் தொகை......

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

மாகப் பெருகி வருகிறது; சராசரி நாள்தோறும் 80,000 குழந்தைகள் பிறக்கின்றன. அதற்கு ஏற்றவாறு உணவு உற்பத்தி பெருக்கமில்லை. குடும்பக் கட்டுப்பாட்டை உலக மக்களில் பாதி பேருக்குமேல் கடைப்பிடித்தாலும்கூட, உலகத்தில் வறுமை அதிகரித்துத்தான்வரும். அடுத்த 50 ஆண்டுகளில் நிச்சயம் 150 கோடி மக்கள் தோன்றுவார்கள்; அதை யாரும் தடுக்க முடியாது" என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

'போர்க் கொடுமை'கள் தோன்றுகின்றன?

பெட்ரோல் கட்டுப்பாடு அமுலாகிறது

லண்டன், நவ. 20—

பிரிட்டனில் டிசம்பர் 17-ந் தேதிமுதல் பெட்ரோல் கட்டுப்பாடு ஏற்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நாளை முதல் இலங்கையில் பெட்ரோல், டீசல் எண்ணெய் உபயோகிப்பவர்களுக்கு 10 சதவிகிதம் குறைக்கப்படும் என இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்த ஆண்டு முடிவுவரை போலந்தில் பெட்ரோல் உபயோகம் குறைக்கப்படும்.

இஸ்ரேல் பெட்ரோல் விலையில் 10 சதவிகிதம் உயர்த்தியிருக்கிறதாம்.

பிரிட்டிஷ் பிரெஞ்சுக்கு அமெரிக்கா கைவிரிப்பு

வாஷிங்டன், நவ 19—

பிரிட்டிஷ், பிரெஞ்சுப் படைகள் வெளியேறும்வரையில் பெட்ரோல், எரி எண்ணெய் ஆகியவைகளை அமெரிக்கா அந்நாடுகளுக்கு விநியோகம் செய்யாது என்று அதிகாரிகள் கூறுகின்றனராம்.

சுட்டுக் கொல்லுகின்றனர்?

போர்ட்செய்தில் இன்னமும் பிரிட்டிஷ், பிரெஞ்சுப் படைகள் மக்களைச் சுட்டுக் கொல்லுவதாக எகிப்து அயல்நாட்டு அமைச்சர் அறிவித்துள்ளார்.

வேறு வழியில்லையே!

லண்டன், நவ. 19—

'எகிப்திலிருந்து வெளியேற மறுத்தாலோ அல்லது சூயஸ் கால்வாய் சம்பந்தமாக நிபந்தனை போட்டாலோ சண்டை செய்யவேண்டியதே' என்று சிரிய அயல்நாட்டு அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

'ஒப்பந்தத்தை மீறியதாகும்'

கெய்ரோ, நவ 20—

கால்வாய் மராமத்து என்று காரணம் காட்டி, ஆக்கிரமிப்பாளர்கள் வெளியேறாவிட்டால் அதை போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறிய செய்கையாக எகிப்து கருதும் எனத் தெரியவருகிறது.

ரஷ்யத் தீர்மானத்திற்கு எதிராக

யூகோ வாக்களிக்கிறது

பாங்காக், நவ. 20—

ரஷ்யத் தீர்மானம் ஒன்றிற்கு எதிராக யூகோஸ்லேவியா வாக்களித்திருக்கும் செய்தி கிடைத்திருக்கிறது.

'மக்கள் சபைகள் யூனியன்' சிறப்புள்ள ஆயுதப் பரிகரணக் குழு ஒன்றில் ரஷ்யா கொண்டு வந்த உலக ஆயுதப் பரிகரணத் தீர்மானத்தை எதிர்த்து யூகோ வாக்களித்திருக்கிறது; அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஆஸ்திரேலியா, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளோடு சேர்ந்து யூகோ வாக்களித்ததாகக் கூறப்படுகிறது.

ஹங்கேரி நிலைமையை நேரில் கண்டறிய!

பார்வையாளரை அனுமதிக்க ஐ. நா. - வில் இந்தியா தீர்மானம்

நியூயார்க், நவ. 19—

'ஹங்கேரியில் உள்ள நிலைமையை நேரில் கண்டு அறிக்கை சமர்ப்பிக்க ஐ.நா. பார்வையாளரை அனுமதிக்க வேண்டும்' என்று இந்தியாவின் சார்பில் ஐ. நா. சபையில் பிரரேபனை தாக்கல் செய்யப் பட்டுள்ளதாம்.

புதிய இரயில் பாதை!

புதுடில்லி, நவ. 20—

தென் இரயில்வே விஜயவாடா - சென்னை பிரிவில் சின்னகஞ்சத்திற்கும் கடவக்குருவுக்கும் இடையே $2\frac{1}{2}$ மைல் தூரத்துக்கு புதிய இரயில் பாதை அமைப்பதற்கு இரயில்வே போர்டு ரூ. 9,54,000 அனுமதித்துள்ளது.

இந்தப் பிரிவில் 13 கூட்ஸ் வண்டிகள், 10 பிரயாணி வண்டிகள் ஓட வேண்டியுள்ளது.

எகிப்தின் உரிமைகள் புறக்கணிப்பு?

ஐ. நா.-விடம் முறையீடு

எகிப்தின் ஆதிபத்திய உரிமையையும், ஐ. நா.-வையும் அடியோடு புறக்கணித்துவிட்டு, பிரிட்டிஷ், பிரெஞ்சு, இஸ்ரேல் படைகள் எகிப்தியப் பகுதியில் வலிமையுடன் நிலைத்துவிட முயற்சித்து வருவதாக ஐ. நா-விடம் எகிப்து புகார் செய்துள்ளது.

முதலில் வெளியேறட்டும்!

ஆக்கிரமித்த படைகள் வெளியேறிய பின்னர்தான் சூயஸ் கால்வாய் மராமத்து வேலைகள் மேற்கொள்ளப்படும் என்று எகிப்து அரசாங்கம் கூறியுள்ளது.

பாகிஸ்தான் பிரதமருக்கு அனுமதி மறுப்பு?

பாகிஸ்தான் பிரதமர் எகிப்துக்கு வருவதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாம்.

கனடாவுக்குத் தடை?

ஐ. நா. படையில் கனடா கலந்துகொள்ளக்கூடாது என்று நாசர் தெரிவித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

உலகெங்கும் குழப்பம் ஏற்படுமென எச்சரிக்கை

'பிரிட்டிஷ், பிரெஞ்சுப் படைகள் இந்த வாரத்துக்குள் வெளியேற வேண்டும்' என்று நாசரின் அரசியல் ஆலோசகர் கூறியுள்ளார்.

'அப்படி அவர்கள் செய்யத் தவறினால் உலகெங்கும் குழப்பம் ஏற்படும்' என்றும் அவர் எச்சரித்தாராம்.

கண்டன நாள்!

மதுரை, நவ. 19—

கெசட் பதிவில்லாத சர்க்கார் ஊழியர்களுக்கு, கிராக்கிப்படியாக மிகச் சிறிய தொகையான ரூ. 5 மட்டுமே அளிக்கப்பட்டதற்கு அதிருப்தியையும் ஏமாற்றத்தையும் தெரிவித்துக்கொள்ளும் வகையில், நவ. 30-ந் தேதியை, 'கண்டன நாளா'க மேற்கொள்ளுவதென என். ஜி. ஓ. மத்தியக் குழு முடிவு செய்திருக்கிறது.

அ. இ. தபால் தொழிலாளர் சங்க கோரிக்கை தினம்

22—11—56 மாலை $6\frac{1}{2}$ மணியளவில், சென்னை தலைமை தபால் அலுவலகத்தில், அகில இந்தியத் தபால் தொழிலாளர் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட 8 தீர்மானங்களை வலியுறுத்தியும், யூனியனின் இரண்டாவது ஆண்டு விழாவையொட்டியும், திரு கே. இராமமூர்த்தி தலைமையில் கூட்டம் ஒன்று நடைபெறும். திரு. டி. செங்கல்வராயன், எஸ். சி. சி. அந்தோணி எம் எல்.ஏ, டி. வி. ஆனந்தம், ஆர். வி. கிருஷ்ணமூர்த்தி, ஏ. எஸ். கே. அய்யங்கார், ஜி. இலட்சுமணன் ஆகியோர் பேசுவர்.

காட்டுப்பாடியில் முத்தமிழ் விழா

நவ. 23, 24, 25 ஆகிய மூன்று தினங்களிலும், காட்பாடி (வட ஆ. மாவட்டம்) அரசினர் ஆதாரப் பயிற்சிப் பள்ளியில் முத்தமிழ்விழா முறையே நா. திவாகரன், கு. மு. அண்ணல்தங்கோ, வே. ஐயா ஆகியோர் தலைமையில் நடைபெறும். 3 நாட்களிலும் முறையே திரு கா. அப்பாதுரை, இளவழகனார், நாரண - துரைக்கண்ணன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர். மூன்று நாட்களிலும் இரவில் கலியாட்டமும், 'பணத்திற்கு மணமா?' 'கலிலியோ', 'திருந்தியவன்', ஆகிய நாடகங்களும் நடைபெறும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, நூரியாநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.